# சமூக நலத்திட்டங்கள்

## கையேடு




* மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினை
திருமண உதவித் திட்டத் தொகை ரூ.5 ஆயிரத்தி
லிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ள

# சமூக நலத்திட்டங்கள்

## கையேடு

அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

சிறப்பு வெளியீடு எண்:- 3
சமூகநலத் திட்டங்கள் - கையேடு

'தமிழரசு' இலவச வெளியீடு

ஏப்ரல் 1997

தகவல் உதவி:-
**திருமதி. த. சபிதா,** இ.ஆ.ப.,
இயக்குநர்
சமூகநலம் மற்றும் சத்துணவுத்துறை
தமிழ்நாடு அரசு

வெளியிடுபவர்:
**வெ. இறையன்பு,** இ.ஆ.ப.,
இயக்குநர்
செய்தி மக்கள் தொடர்புத் துறை
தமிழ்நாடு அரசு

அச்சிட்டோர்:
தமிழரசு அச்சகம், சென்னை-600 002.

# மகளிர் நலம்

## (அ) மகளிருக்கான நலத்திட்டங்கள்

## திருமண உதவித் திட்டங்கள்

### 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டம்.




**பெறும் பயன்கள் :**
ஒரு நபருக்கு ரூ. 10,000 ரொக்கமாக

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
வயது : 18 நிரம்பியவர்.
கல்வி: எட்டாம் வகுப்புத் தேர்ச்சி (பழங்குடியினருக்கு ஐந்தாம் வகுப்பு) பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு மிகாமல். ஒரு குடும்பத்தில், ஒரு மகளுக்கு மட்டுமே உதவி அளிக்கப்படும். திருமணத்திற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாநகராட்சி ஆணையர் - சென்னை, கோவை, மற்றும் மதுரை. நகராட்சி ஆணையர் - நகரங்களில். ஊராட்சி ஆணையர் - ஊரகப்பகுதிகள். மாவட்டங்களில், மாவட்ட சமூகநல அலுவலர்கள், ஊர்நல அலுவலர், விரிவாக்க அலுவலர்.

### 2. ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்

**பெறும் பயன்கள் :**
ரூ. 3,000/- ரொக்கமாக.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
வயது : 20 முதல் 30 வரை.
பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 12,000/- இந்த நிதிஉதவி பெற திருமணத்திற்கு இரண்டு மாதங்கள் முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூக நல அலுவலர், ஊர்நல அலுவலர், விரிவாக்க அலுவலர்.



## 3. அஞ்சுகம் அம்மையார் நினைவுத் திருமணத் திட்டம். (கலப்புத் திருமண உதவித் திட்டம்)




**பெறும் பயன்கள் :**

ஒரு நபருக்கு ரூ. 10,000/- (ரூ. 7,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் ரூ. 3,000/- ரொக்கமாகவும்)

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

தம்பதியர் இருவரது ஆண்டு வருமானம் ரூ. 12,000/- மேலும் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். திருமண நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூகநல அலுவலர், ஊர்நல அலுவலர், விரிவாக்க அலுவலர்.




## 4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம். (விதவை மறுமணத் திட்டம்)

**பெறும் பயன்கள் :**

ஒரு தம்பதியருக்கு ரூ. 5,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூபாய் 2,000/- திருமணச் செலவிற்காகவும் அளிக்கப்படும்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

வயது : 20 முதல் 30 வரை.

ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு அதிகப்படாமல். திருமண நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூகநல அலுவலர், ஊர்நல அலுவலர், விரிவாக்க அலுவலர்.




## 5. ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம்.

**பெறும் பயன்கள் :**
ஒரு நபருக்கு ரூ. *3,000/-*

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
வயது : *20* முதல் *30* வரை
ஆண்டு வருமானம் ரூ. *12,000/-*
விதவையின் ஒரு மகளுக்கு மட்டுமே இப்பயன் வழங்கப்படும். திருமணத்திற்கு 2 மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர், ஊர்நல அலுவலர், விரிவாக்க அலுவலர்.

மேற்காணும் ஐந்து திருமணத் திட்டங்களின் கீழ் நடைபெறும் திருமணங்கள் சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை இந்த அரசு தளர்த்தியுள்ளது.

## 6. டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம்.

**பெறும் பயன்கள் :**
மகளிர் பேறு காலத்தின்போது மாதம் ரூ. *125/-* வீதம் பேறுகாலத்திற்கு முன் இரண்டு மாதத்திற்கும், பேறுகாலத்திற்குப்பின் இரண்டு மாதத்திற்கும், ஆக நான்கு மாதத்திற்கு உதவித்தொகை மற்றும் மதிய உணவு வழங்குதல்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
வயது : *20*க்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ. *12,000/-*க்கு அதிகப்படாமல் இருத்தல் வேண்டும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் இந்நிதியுதவி வழங்கப்படும். இரண்டாவது குழந்தைப்பேறுக்கான உதவி பெறும்போது, கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையர், மற்றும் இதர இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் / மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்.

## (ஆ) மகளிருக்கு வருவாய் ஈட்டும் திட்டங்கள்.

### 1. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி அளித்தல்




**பெறும் பயன்கள் :**
தட்டச்சுப் பயிற்சி ஆண்டிற்கு ரூ. 150/ சுருக்கெழுத்துப் பயிற்சி ஆண்டிற்கு ரூ. 220/.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
ஆண்டு வருமானம் ரூ. 12,000/- கல்வி 10ஆம் வகுப்புத் தேறியவர்கள் / தவறியவர்கள்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர்.

### 2. இலவசத் தையல் இயந்திரம் வழங்குதல்




**பெறும் பயன்கள் :**
தகுதியுள்ள நபர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்குதல்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
ஆண்டு வருமானம் ரூ. 12,000/- மகளிர் மற்றும் ஊனமுற்ற ஆண்கள். வயது : 20 முதல் 40 வரை. மேலும் தையல் தெரிந்திருக்கவேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர்.

### 3. மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்:

*41 தையல் பயிற்சி மையங்கள்; 4 பனை ஓலைப் பயிற்சி நிலையங்கள்; 2 கம்பளித் தயாரிப்புப் பயிற்சி நிலையங்கள்; மூங்கில் கைவினைப்பொருட்கள் பயிற்சி நிலையம் மற்றும் சாக்குக் கட்டி உற்பத்தி மையம் தலா 1; 2 மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையம், உடன் அணி ஆடை மற்றும் துணி பொம்மை தயாரிக்கும் நிலையம் தலா ஒன்று.*

**பெறும் பயன்கள் :** மாதம் ரூ. 50/- உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி.

**தகுதிகள் / நிபந்தனைகள் :** ஆண்டு வருமானம் ரூ. 12,000/-

**அணுகவேண்டிய அலுவலர் :** மாவட்ட சமூகநல அலுவலர்.





## 4. மகளிர்க்கான கூட்டுறவுச் சங்கங்கள் :

79 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், 38 காலணி கூட்டுறவுச் சங்கங்கள், 20 எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள், 2 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள், 2 திரவ சோப்பு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், ஒரு ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம், ஒரு இறால் ஊறுகாய் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம், 26 இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.




**பெறும் பயன்கள் :**
சுய வேலைவாய்ப்பு

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர்.

# (இ) துயருறும் பெண்களுக்கு, நிறுவன ஆதரவு.

## 1. சேவை இல்லங்கள்




**பெறும் பயன்கள் :**

ஆதரவற்ற பெண்கள் இரண்டு குழந்தைகளுடன் மூன்று ஆண்டுகள் இலவசமாகத் தங்க அனுமதி. இக்காலத்தில் மகளிருக்கும், குழந்தைகளுக்கும் கல்வி, தொழிற் கல்வி, உணவு, மற்றும் உடைகளுக்கான உதவி.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள்.

**அணுகவேண்டிய அலுவலர் :**

**கண்காணிப்பாளர் - சேவை இல்லம்** - தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி.

## 2. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்.




**பெறும் பயன்கள் :**

உள்ளுறை மாணவருக்கு மாதம் ரூ. 75/- மற்றும் ஆசிரியர் இருவருக்கான ஊதியத் தொகை.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

ஆதரவற்ற மாணவ, மாணவியர்கள்.

**அணுகவேண்டிய அலுவலகம் :**

1. ஈரோட்டிலுள்ள கஸ்தூரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளை
2. மதுரையிலுள்ள சேவாஸ்ரமம்.

## 3. பணிபுரியும் மகளிர் விடுதிகள்




**பெறும் பயன்கள் :**
பாதுகாப்பான, சுகாதாரமான இருப்பிட வசதி.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
சென்னையில் ரூ. 5,000/-ம், மாவட்டங்களில் ரூபாய் 4,500/- க்கும் மிகாமல் மாத வருமானம் பெறும் பணிபுரியும் பெண்கள். உணவுச் செலவு, கட்டட வாடகை மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடம் இருந்து சம அளவில் வசூலிக்கப்படும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர், சென்னை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர் மற்றும் தூத்துக்குடி.

## 4. பணிபுரியும் பெண்கள் விடுதி கட்ட நிதி உதவி அளித்தல்

**பெறும் பயன்கள் :** மொத்த மதிப்பீட்டில் 15 விழுக்காடு அல்லது ரூ. 35,000/-ல் எது குறைவோ. அது மாநில அரசின் மான்யமாக வழங்கப்படுகிறது.

**தகுதிகள் / நிபந்தனைகள் :** தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள்.

**அணுகவேண்டிய அலுவலர் :** சமூக நல இயக்குநர், சென்னை - 600 005.

## 5. மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் வழங்குதல்.

**பெறும் பயன்கள் :**
தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் வாயிலாக சுய வேலை வாய்ப்பிற்குக் கடன் தொகை ரூ. 5,000/- வழங்குதல்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
வயது : 18-45 வரை ஆண்டு வருமானம் ரூ. 12,000/- உணவுப் பங்கீட்டு அட்டை நகல்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
சென்னையில் தனிஅலுவலர், வழிகாட்டி மையம், சமூகநல இயக்ககம். மாவட்டங்களில் மாவட்ட சமூகநல அலுவலர், வழிகாட்டி அலுவலர்.

## (ஈ.) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம்

*(100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.)*

### 1. பன்னாட்டு நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு மகளிர்மேம்பாட்டுத் திட்டம்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

1. தேர்ந்தெடுக்கப்படும் மகளிர்கள் 18-55 வயதுக்குள்ளாக இருத்தல் அவசியம்.
2. சிறு/குறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள்.
3. ஆண்டு வருமானம் ரூ. 11,000 அதிகப்படாமல்.
4. பயனாளிகள் வேறு எந்த நிறுவனத்திடமும் கடன் பெற்று இருக்கக் கூடாது.
5. 15லிருந்து 30 பெண்கள் வரை சிறு சிறு குழுக்கள் அமைத்து, சேமிப்புப் பழக்கத்தினை மேற்கொள்ளுதல் அவசியம்.
6. திட்டங்கள் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மகளிர் மேம்பாட்டுக் கழகம், திட்ட செயலாக்க அலுவலர், தருமபுரி, சேலம், விழுப்புரம் இராமசாமிபடையாச்சியார், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள். இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் 97-98 ஆம் ஆண்டிலிருந்து விரிவுபடுத்தப்படுகிறது.

### 2. இதர திட்டங்கள்:

**(அ) வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள் நார்வே நாட்டு நிதி உதவியுடன்**

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கிராமப்புறப் பெண்களுக்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

**(ஆ) வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள் ''ஸ்டெப்'' நிதி உதவியுடன்**

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

பதிவு செய்யப்பட்ட அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கிராமப்புறப் பெண்களுக்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

**(இ) வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள் ''சிறப்பு மையத் திட்டநிதி'' உதவியுடன்**

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

ஆதி திராவிடப் பெண்களுக்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

**(ஈ) தொழிற்பயிற்சித் திட்டங்கள்**

**பெறும் பயன்கள் :**

பதிவு செய்யப்பட்ட அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கிராமப்புற மகளிருக்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

**(உ) பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்கள்**

**பெறும் பயன்கள் :**

பதிவு செய்யப்பட்ட அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கிராமப்புற மகளிருக்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

**(ஊ) தொழில் வளர்ச்சிப் பிரிவு - சுயவேலைவாய்ப்பு**

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

தொழில் துவங்க ஆர்வம் உள்ள மகளிருக்கு

**அணுகவேண்டிய அலுவலர் :**

மேலாளர் (வளர்ச்சி) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், கிண்டி, சென்னை - 600 032.

# குழந்தைகள் நலம்

## 1. விதவைகளின், பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பாட நூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்.




**பெறும் பயன்கள் :**

ரூ. 50 முதல் ரூ. 600 வரை மதிப்புள்ள பாட மற்றும் நோட்டுப்புத்தகங்கள், ஓராண்டு காலத்துக்கு, வகுப்பு வாரியாகப் பிரிக்கப்பட்டு வழங்குதல்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்கு குறைவாகப் பெறும் விதவைகள்.

**அணுகவேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூகநல அலுவலர்.

## 2. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள்.

**பெறும் பயன்கள் :**

1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் ஆண் குழந்தைகளுக்கும், 5 வயது முதல் 21 வயது வரை பயிலும் பெண் குழந்தைகளுக்கும், இலவசமாக உணவு, உடை, உறைவிடம், சீருடை மற்றும் கல்வி வசதி.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**

ஆதரவற்ற குழந்தைகள்; மாணவன் 5 வயது முதல் 10 வயது வரை, மாணவி 5 வயது முதல் 21 வயது வரை.

**நடத்தப்படும் இடங்கள் :**

சென்னையில் 2 இடங்களிலும், அண்ணா மாவட்டம் (காஞ்சிபுரம்), திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் (திருவண்ணாமலை), தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் (கடலூர்), தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், இராமநாதபுரம், தர்மபுரி, சிதம்பரனார் (ஸ்ரீ வைகுண்டம்), பெரியார் (ஈரோடு) கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரிமாவட்டம் (நாகர்கோயில், திக்கண்ணன்கோடு), சேலம் நகரிலும், சேலம் ஆத்தூரிலும், மதுரை, பசும்பொன்முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் (மானாமதுரை), காமராஜர் (விருதுநகர்), திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், நெல்லைகட்டபொம்மன் மாவட்டம், வேலூர் வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம், நாகப்பட்டினம் காயிதெமில்லத் மாவட்டம் (சிக்கல்)

## 3. தனியார் தொண்டு நிறுவனங்களால், அரசு மான்ய உதவியுடன் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள் :

**பெறும் பயன்கள் :**
ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 175/- வீதம் மான்யம், உணவு, உடை முதலியவற்றிற்காக வழங்கப்படும். 183 நிறுவனங்கள் அரசு மான்ய உதவியுடன் நடத்தப்படுகின்றன.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
ஆதரவற்ற குழந்தைகள்;

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர்

## 4. தொட்டில் குழந்தைத்திட்டம்

மதுரை மற்றும் சேலத்தில் பெண்சிசுக்கொலையை தடுக்க பெண் குழந்தைகளுக்கான வரவேற்புமையம் நடத்தப்பட்டு வருகிறது.

## 5. பெண்குழந்தைப்பாதுகாப்புத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உள்ள பெற்றோர், கருத்தடை அறுவை சிகிச்சை செய்திருப்பின், அக்குழந்தைகளின் பராமரிப்புக்காக அரசு கீழ்க்கண்ட உதவிகளை வழங்குகிறது.

1) ஒரு பெண் குழந்தை மட்டும் 3 வயது நிரம்பியிருந்தால் : ரூ. 3,000/-த்திற்கான முதலீட்டுப்பத்திரம் – ஐந்து வருடத்திற்கு.

2) இரு பெண்குழந்தைகள் இருந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் தலா ரூ. 1,500/-வீதம் முதலீட்டுப்பத்திரம் – ஐந்து வருடத்திற்கு.

**அணுகவேண்டிய அலுவலர் :** மாவட்ட சமூகநல அலுவலர்.



6. கீழ்காணும் திட்டங்களின் கீழ் குழந்தைகளுக்கு சத்துணவு, கல்வி, சீருடை, மருத்துவ உதவி ஆகியவை அளிக்கப் படுகின்றன.

*அ)* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச் சத்துத் திட்டம்.

இத்திட்டத்தில் 6 மாதம் முதல் 6வயதுவரையிலான குழந்தைகள், வளர் இளம்பெண்கள், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும்தாய்மார்கள் ஆகியோர் பயனடைவார்கள்.

**ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இத்திட்டத்தில் 6 வயது முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லும் சிறுவர், சிறுமியர் பயனடைவார்கள்.

**இ)** சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் அனைத்துப் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கும் ஆண்டுக்கு ஒரு செட் சீருடை வழங்கப்படும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், மேற்பார்வையாளர், அங்கன்வாடிப் பணியாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்.

# முதியோர் நலம்

அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்




## முதியோர் ஓய்வூதியம்

**பெறும் பயன்கள் :**
1. மாதம் ரூ. 100/- 2. வேட்டி அல்லது சேலை 3. சத்துணவு 4. முதியோர் இல்லம்.

**தகுதிகள் / நிபந்தனைகள் :**
1. 60 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் - ஆதரவற்ற விதவைகளுக்கு வயது வரம்பு கிடையாது. கணவரால் கைவிடப்பட்டோருக்கு வயது வரம்பு 30 - 5 ஆண்டுகள் கணவரிடமிருந்து பிரிந்திருத்தல் வேண்டும். 2. ஆதரவற்றோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள். 3. நிலையான வருமானம் ஏதும் இல்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுகவேண்டிய அலுவலர் :**
மாவட்ட சமூகநல அலுவலர், தாலுக்காகளில் துயர்துடைப்பு வட்டாட்சியர்.

தமிழரசு

படித்துப்

பயன் பெறுவீர்